பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

01 04 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றுவதில் ரிசர்வ் வங்கி முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்

2. நக்சலைட்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. சிலி அதிபர், பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகள், புதிய ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் திருச்சியில் கட்டப்படும் நூலகத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்டப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

5. இந்தியாவின் விண்வெளித் திட்டங்களில் பங்கேற்க மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாக விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் கூறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்றுவதில் ரிசர்வ் வங்கி முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று ரிசர்வ் வங்கியின் 90-ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பேசிய அவர், நாட்டில் பணப்பட்டுவாடா முறையை நவீனப்படுத்த இந்த வங்கி தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

நபார்டு வங்கி, ஐ டி பி ஐ வங்கி மற்றும் தேசிய வீட்டுவசதி வங்கி போன்றவற்றை ஏற்படுத்தியதன்மூலம், நிதிச் சூழலை ரிசர்வ் வங்கி பெருமளவுக்கு மாற்றியமைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயம், சிறுதொழில் மற்றும் வீட்டுவசதித்துறைகளுக்கு ரிசர்வ் வங்கி பேருதவியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

ரிசர்வ் வங்கியின் 90 ஆண்டுகால செயல்பாடுகள் அரசின் கொள்கை மற்றும் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப அமைந்திருப்பதை சுட்டிக்காட்டிய குடியரசுத் தலைவர், நாடு தனது சுதந்திர தின நூற்றாண்டை கொண்டாட இருக்கும் வேளையில், புதுமையான மற்றும் அனைவரும் எளிதில் அணுகத்தக்க நிதிச்சூழலை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா, ரிசர்வ் வங்கி மீது நாட்டு மக்கள் வைத்துள்ள அளப்பரிய நம்பிக்கையை பேணி காப்பதுடன், வரும் ஆண்டுகளில் அதனை மேலும் வலுப்படுத்த உறுதிபூண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஒடிஷா தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்நாளில் ஒடிஷாவின் கலாச்சார பாரம்பரிய சிறப்பு மற்றும் பல்வேறு துறைகளிலும் ஒடிஷா மக்களின் பங்களிப்பை கொண்டாடுவோம் என்று தெரிவித்துள்ளார்.

சுதந்திரப்போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்துள்ள ஒடிஷா, நவீன இந்தியாவின் சிற்பிகள் பலரை உருவாக்கியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஒடிஷாவின் முன்னேற்றத்திற்காக மத்திய – மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இயற்கை வளங்கள் மிகுந்த ஒடிஷா மாநிலம், நாட்டின் பெருமைக்குரிய மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

நக்சலைட்டுகள் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், அரசின் நடவடிக்கைகளால் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை 12-ல் இருந்து 6-ஆக குறைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

வலிமையான, பாதுகாப்பான மற்றும் வளமான இந்தியாவை உருவாக்கும் நோக்கில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் வளர்ச்சிப்பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் நாட்டில் இருந்து நக்சலைட் தீவிரவாதத்தை முழுமையாக ஒழிக்க அரசு உறுதிபூண்டிருப்பதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>**

புதுதில்லி வந்துள்ள சிலி நாட்டு அதிபர் திரு. **Gabriel Boric Font**-ஐ, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் சந்தித்து பேசியுள்ளார்.

இதுகுறித்து, திரு ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியா – சிலி இடையிலான நீண்டகால ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென்ற சிலி அதிபரின் உறுதிப்பாட்டை பாராட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் அவர் நடத்தவுள்ள பேச்சுவார்த்தைகள், புதிய ஒத்துழைப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் திரு ஜெய்சங்கர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புதுதில்லி வந்தடைந்த சிலி அதிபரை, வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு பபித்ரா மார்கரிட்டா விமான நிலையத்தில் வரவேற்றார்.

சிலி அதிபருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

பின்னர் அவர், தில்லி ராஜ்காட்டில் உள்ள அண்ணல் காந்தியடிகள் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

<<<<<<>>>>>

வக்ஃப் சட்டத்திருத்த மசோதா எந்தவொரு தரப்பினரின் சொத்துக்களையும் எடுத்துக்கொள்வதற்காக கொண்டுவரப்படவில்லை என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் மக்களை தவறாக வழிநடத்துவதாக குற்றம் சாட்டினார்.

வக்ஃப் மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெறும் போராட்டங்கள் தேவையற்றது என்று இந்த மசோதா குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் தலைவர் திரு ஜெகதாம்பிகா பால் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆதாயத்திற்காக சமரச அரசியலில் ஈடுபடுவதாகவும் திரு ஜெகதாம்பிகா பால் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

அந்நிய செலாவணி கையிருப்பு அதிகம் வைத்துள்ள நான்காவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று இதனை தெரிவித்த அவர், கடந்த 11 மாத கால இறக்குமதியின் அடிப்படையில் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் திருச்சியில் கட்டப்படும் சர்வதேச தரத்திலான நூலகத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்டப்படும் என முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரத்திற்குபின் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட அவர், கோவையில் சர்வதேச தரத்திலான நூலகம் கட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது என்று கூறினார்.

மதுரையில் செயல்பட்டுவரும் நூலகத்தின்மூலம், கடந்த ஓராண்டில் 16 லட்சம் மாணவர்கள் பயனடைந்திருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நீலகிரி மாவட்டத்திற்கு செல்லும் சுற்றுலாப்பயணிகளுக்கு இ-பாஸ் நடைமுறை இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், கோவை மாவட்டம் கல்லாறு சோதனைச்சாவடியில், அதிகாரிகள் ஆய்வுப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இ-பாஸ் வைத்துள்ள வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் டைப் - கோவை ஹரிஹரன் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

இந்தியாவின் விண்வெளித் திட்டங்களில் பங்கேற்க மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாக அமெரிக்காவை சேர்ந்த இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விண்வெளி மையத்தில் நீண்டநாள் தங்கியிருந்த அவர் அண்மையில் பூமிக்கு திரும்பினார்.

இந்நிலையில், செய்தியாளர்களை சந்தித்த சுனிதா வில்லியம்ஸ், விண்வெளியில் இருந்து இந்தியாவை பார்த்தபோது மிகவும் வியப்படைந்ததாக கூறினார்.

சர்வதேச விண்வெளி நிலையம் ஒவ்வொரு முறையும் இந்தியாவை கடந்துசெல்லும்போது, இமயமலையின் எழிலை கண்டு தாம் வியப்படைந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும், தமது முன்னோர்களை பற்றிய நினைவு தமக்கு ஏற்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது தந்தையின் சொந்த நாடான இந்தியாவுக்கு விரைவில் வர இருப்பதாகவும் சுனிதா வில்லியம்ஸ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத்திட்டம் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது.

தேசிய ஓய்வூதியத்திட்டத்தின்கீழ், அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்திற்கான விதிமுறைகள், ஓய்வூதிய ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தால் அண்மையில் வெளியிடப்பட்டிருப்பதை மத்திய அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, மத்திய அரசு சுகாதாரத் திட்டத்தின்கீழ், பயனடையும் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் லக்னோ – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7 .30 க்கு தொடங்குகிறது.

----

ஸ்குவாஷ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் அபெய் சிங் 49-வது இடத்திற்கும், மகளிர் பிரிவில் அனாகத் சிங் 62-வது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

<<<<<<>>>>>